# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 189 | திங்கள் Monday | 05.10.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# “பெண்களை அவதூறாக பேசுபவர்களுக்கு வாக்களிக்கக் கூடாது” தாராபுரத்தில் முதலமைச்சர் விஜய் பேச்சு



தாராபுரம்: "பெண்களை இழிவாகவும் அவதூறாகவும் பேசுபவர்களுக்கு மக்கள் வாக்களித்து ஆதரிக்கக் கூடாது" என்று தாராபுரம் தேர்தல் பிரச்சாரத்தில்தவெகதலைவரும், முதல்வருமான விஜய் வலியுறுத்தினார்

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் இடைத்தேர்தல் பிரச்சாரத்தின் கடைசி நாளான இன்று (அக்.4) தமிழக வெற்றிக் கழகதலைவரும்,தமிழக முதல்வருமான விஜய் பங்கேற்ற ரோடு ஷோ நடைபெற்றது.

சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் கோவை வந்த அவர் அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் தாராபுரத்தில் ஹெலிபேட் அமைந்துள்ள மாருதி நகருக்கு பகல் 12.45 மணியளவில் வருகை தந்தார்.

அவரது வருகையை அறிந்து நூற்றுக்கணக்கான தொண்டர்கள் திரண்டு அவரை வரவேற்றனர். அங்கிருந்து பிரச்சார வேனில் ஏறிய விஜய் அங்கு திரண்டிருந்த மக்களை பார்த்து கையசைத்து வணக்கம் தெரிவித்தார். வேட்பாளர் சத்யபாமாவுடன் திரண்டிருந்த பொதுமக்கள் மத்தியில் விசில் சின்னத்துக்கு வாக்களிக்கக் கோரி ஆதரவு திரட்டினார்.

தாராபுரம் நகரின் மையப்பகுதியில் திரண்டிந்த மக்களிடையே பேசிய அவர், "கடந்த சில தினங்களுக்கு முன் மதுராந்தகம் பகுதியில் சுற்றுப்பயணம் செய்து மக்களைச் சந்தித்தேன். அங்குள்ள நம் சொந்தங்கள் எனக்கு சிறப்பாக வரவேற்பளித்தனர். அதனைத் தொடர்ந்து, தற்போது தாராபுரம் சொந்தங்களைச் சந்திக்க வந்துள்ளேன்.

திமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கு வாக்களிப்பது என்பது, பெண்களை அவதூறாகப் பேசுபவர்களை ஆதரிப்பதற்குச் சமம். நமது வீட்டு தாய்மார்களையும், சகோதரிகளையும் தரக்குறைவாகப் பேசுபவர்களை எந்தக் காலத்திலும் மன்னிக்கக் கூடாது. தேர்தல் ஆதாயத்திற்காக மட்டும் நான் இதனைக் கூறவில்லை. அண்மையில் தாராபுரத்திற்கு வருகைதந்த திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் மற்றும் அவரது மகன் ஆகியோர் பேசிய பேச்சுகள் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. சகோதரி சத்யபாமா குறித்து அவர்கள் பேசிய வார்த்தைகள் காது கொடுத்து கேட்க முடியாத அளவுக்கு மிகவும் மோசமாக அமைந்துள்ளன.

என்னைப் பற்றி யார் என்ன விமர்சனம் செய்தாலும் அதை நான் பொறுத்துக் கொள்வேன். ஆனால், நம் வீட்டுப் பெண்களையோ அல்லது நம் வீட்டில் உள்ள அம்மாவையோ, சகோதரிகளையோ இழிவாகப் பேசினால் நிச்சயம் சும்மா இருக்க மாட்டேன்.

திமுகவினரின் இது போன்றதரமற்றபிரச்சாரங்கள் இன்று நேற்றல்ல எம்ஜிஆர் காலத்தில் இருந்தே இவ்வாறு தான் உள்ளது. இந்த இடைத்தேர்தலில் அவர்களுக்கு தக்க பாடம் புகட்ட வேண்டும். விசில் சின்னத்தில் வாக்களித்து சகோதரி சத்யபாமாவை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றியடைச் செய்ய வேண்டும்." என தெரிவித்தார்.

இன்று வழக்கத்தை காட்டிலும் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. ஆனாலும் வழி நெடுகிலும் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு விஜய்க்கு வரவேற்பளித்தனர். அப்போது தாராபுரம் அமராவதி ஆற்று பாலம் அருகில் வந்தபோது பிரச்சாரவேனில்இருந்து இறங்கிய அவர், விவசாயி நிறுத்தி இருந்த ரேக்ளா வண்டியில் ஏறி அமர்ந்து சில அடி தூரம் அதில் சவாரி செய்தார்.

இதே போல தொண்டர்கள் அளித்த பரிசு பொருள்களை பெற்றபடி அவரின் பிரச்சார பயணம் தொடர்ந்தது. பெண்கள் ஆரத்தி எடுப்பதை அறிந்து அங்கு வாகனத்தை நிறுத்தி, கீழே இறங்கிச் சென்று ஆரத்தி மரியாதையை ஏற்றுக் கொண்டார். பெண்கள் அவருக்கு திருஷ்டி பொட்டு வைத்த போது,அவரும்பதிலுக்கு ஆரத்தி எடுத்த பெண்களுக்கு திருஷ்டி பொட்டு வைத்தார்.இதைக்கண்டு கூடியிருந்தவர்கள் உற்சாகம் அடைந்தனர்.

# “திமுக., அ.தி.மு.க. கூட்டணி என்று சொல்லி ஏமாற்றப் பார்க்கிறார்கள்”

## மதுராந்தகம், தாராபுரம் வாக்காளர்களுக்காக வீடியோ வெளியிட்டு மு.க.ஸ்டாலின் பேச்சு



சென்னை:

"திமுக.வும் அதிமுக.வும் கூட்டணி அமைக்க முயன்றதாக இல்லாத ஒரு கதையைச் சொல்லி மக்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள். உண்மையில், தன்னை வளர்த்து ஆளாக்கிய கட்சியையே ஒழிப்பதற்கு ஆளுங்கட்சி வேட்பாளர் செய்த துரோகத்தின் விளைவுதான் இந்த இடைத்தேர்தல்." என்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தாராபுரம்மற்றும்மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலையொட்டி ஸ்டாலின் சமூக வலைதளங்களில் காணொளி வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறி இருப்பதாவது:

"வாக்காளப் பெருமக்களுக்கு வணக்கம். தேர்தல் முடிந்து நான்கு மாதங்கள்தான் ஆகின்றன. அதற்குள் உங்கள் தொகுதி இடைத்தேர்தலைச் சந்திக்கிறது. இந்த இடைத்தேர்தலுக்கான அவசியம் என்ன என்பதை ஒரு நிமிடம் சிந்தித்துப் பாருங்கள்.

இந்நேரம் எல்லா தொகுதிகளிலும் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது தொகுதிகளுக்கான பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால், உங்களுக்கு உண்மையாக இருப்பார் என்று நினைத்து நீங்கள் தேர்ந்தெடுத்த வேட்பாளர் என்ன செய்திருக்கிறார்?

மீண்டும் உங்களிடமே வாக்கு கேட்டு வந்து நிற்கிறார். அவரது இந்தச் செயலில் ஏதாவது நியாயம் இருக்கிறதா? கொள்கை நேர்மை இருக்கிறதா? ஒரு துளியாவது உங்கள் நலன் இருக்கிறதா?

வாக்களித்த உங்களது தன்மானத்தை விலைபேசி, ஆளுங்கட்சியின் குதிரைபேரத்துக்குப் துணைபோனவர்களுக்கு நீங்கள் என்ன பதிலடி தரப்போகிறீர்கள்? வாக்குகளுக்காக உங்களை மீண்டும் ஏமாற்ற அவர்கள் சொல்லும் கட்டுக்கதைகளையும் பொய்களையும் நம்பப் போகிறீர்களா?

உங்கள் தொகுதியில் ஆளுங்கட்சி வேட்பாளராகப் போட்டியிடுபவர், பெட்டி வாங்கிவிட்டு உங்களிடம் நடிப்பதற்கு என்ன காரணம் சொல்கிறார்? ஆளுங்கட்சியில் சேர்ந்தால்தான் மக்களுக்கு நன்மை செய்ய முடியும் என்று நடிக்கிறார்கள். அதுவா உண்மை?

ஆளும் கட்சியாக இருந்தால்தான் நல்லது செய்ய முடியும் என்றால், எல்லா ஆட்சியிலும் எதிர்க்கட்சிகளில் இருக்கும் அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும் பதவியை ராஜினாமா செய்துவிட்டு ஆளுங்கட்சிக்குச் சென்றிருக்க வேண்டுமே. அடுத்து,திமுக.வும் அதிமுக.வும் கூட்டணி அமைக்க முயன்றதாக இல்லாத ஒரு கதையைச் சொல்லி மக்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள். உண்மையில், தன்னை வளர்த்து ஆளாக்கிய கட்சியையே ஒழிப்பதற்கு ஆளுங்கட்சி வேட்பாளர் செய்த துரோகத்தின் விளைவுதான் இந்த இடைத்தேர்தல்.

இங்கு பிரச்சாரத்திற்கு வந்த முதல்வர் விஜய் தொடங்கி அமைச்சர்கள் வரை யாராவது, "நாங்கள் வாக்குறுதி அளித்த மகளிருக்கான 2,500 ரூபாயைக் கொடுத்துவிட்டோம்; ஆண்டுக்கு ஆறு சிலிண்டர்களை உங்களுக்கு வழங்கிவிட்டோம் பாருங்கள்" என்று சொல்லி வாக்குக் கேட்டார்களா? இல்லையே.

ஏனென்றால், த.வெ.க. ஆட்சி என்பது மக்களாகிய உங்களுக்கு நன்மை செய்வதற்காக அமைந்த ஆட்சி அல்ல; மாஃபியா கும்பல்கள் தமிழகத்தை கொள்ளையடிப்பதற்காக அமைந்துள்ள ஆட்சி. தமிழகத்தை பின்னோக்கி அழைத்துச் செல்லப் போகிறார்கள்.

விலைவாசியைக் கட்டுப்படுத்தச் சொன்னால், முதல்வர் விஜய், ஜோசியரின் ஆலோசனையைக் கேட்டு 1,200 கோடி ரூபாயில் தலைமைச் செயலகம் கட்டுவார். விவசாயிகள், மீனவர்கள், அரசு ஊழியர்கள் போராடினால் அதைப் பற்றிக் கவலைப்படாமல் லண்டனுக்குச் சென்று கார் பந்தயம் பார்ப்பார்.

கொத்துக் கொத்தாகக் கொலைகள் நடந்தால் அதைப் பற்றிக் கவலைப்படாமல் "சிங்கப்பெண் படை" என்று ரீல்ஸ் வெளியிடுவார். இப்போதைக்கு அவர்களது கவனம் முழுவதும், ஆட்சியைக் காப்பாற்றுவதற்காக எப்படி சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கலாம் என்பதில்தான் இருக்கிறது.

எனவே, நான் உங்களிடம் கேட்டுக்கொள்வது ஒன்றுதான். பிரச்சாரத்திற்கு வந்த ஆளுங்கட்சி வேட்பாளர்களை ஊருக்குள்ளேயே அனுமதிக்காமல் எப்படி விரட்டினீர்களோ, அதேபோன்று வரும் 6-ம் தேதி உங்கள் வாக்குகளால் அவர்களுக்குத் தோல்வியைக் கொடுத்து விரட்டியடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மக்களுக்கு எப்படிப்பட்ட பிரச்சினைகள் வந்தாலும் ரீல்ஸ் போட்டும், பொய்யான கதைகளைச் செய்திகளாக்கியும் மக்களை ஏமாற்றிவிடலாம் என்று நினைக்கும் தவெக.வுக்கு, மக்களாகிய நீங்கள் இந்தத் தேர்தலில் ஏமாற்றத்தைத் தர வேண்டும்.

ஆளுங்கட்சியின் ஆணவத்துக்கும் அதன் வேட்பாளரின் துரோகத்துக்கும் நீங்கள் சரியான பாடம் புகட்டினால்தான், மீண்டும் நமது தமிழகத்தில் எங்கேயும் இதுபோன்ற அநியாயம் நடைபெறாது.

உங்களுக்காகவும், தொகுதியின் வளர்ச்சிக்காகவும்,மிகமுக்கியமாக உங்களுக்கு உண்மையாக இருந்து மக்கள் பணியாற்றவும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தாராபுரத்தில் வழக்கறிஞர்எஸ்.சுகன்யாவுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மதுராந்தகத்தில் போட்டியிடும் வழக்கறிஞர் இ. பரந்தாமனுக்கும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாட்டில் 27 மாவட்டங்களில் இடி, மின்னலுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு



சென்னை:

தமிழ்நாட்டில் 27 மாவட்டங்களில் இடி, மின்னலுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

(அக்.05) முதல் அக்.09-ஆம் தேதி வரை தமிழ்நாட்டில் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய தென் தமிழக கடலோரப் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய தென் தமிழக கடலோரப் பகுதிகள் முதல் மத்திய கிழக்கு அரபிக்கடல் வரை வடதமிழகம் மற்றும் வடகேரளம் வழியாக ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை (Trough) நிலவுகிறது.

இதன் காரணமாக, கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலை பகுதிகள் மற்றும் நீலகிரி, தேனி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய கனமழை இன்று (அக்.04) பெய்யக்கூடும். அதேபோல், நாளை (அக்.05) மற்றும் நாளை மறுநாள் (அக்.06) கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி, தேனி, கிருஷ்ணகிரி, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

நாளை (அக்.05) திருப்பூர், ஈரோடு, சேலம், நாமக்கல், திருப்பத்தூர், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், கரூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர், தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் ஒரு சில இடங்களில் இடி,மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# வங்கி, யு.பி.ஐ., கணக்குகள் மூலம் ரூ.60 லட்சம் பரிவர்த்தனை கலெக்டர் மற்றும் எஸ்.பி.,யிடம் இளைஞர் புகார்



தனது வங்கி மற்றும் யு.பி.ஐ., கணக்குகள் மூலம், வேடபட்டியைச் சேர்ந்த 'சிட்டி டிரேடர்ஸ்' நிறுவன உரிமையாளர் கணேஷ்குமார், எட்டு மாதங்களில் ரூ.60லட்சம் வரை வணிகப் பரிவர்த்தனை செய்துள்ளதாகக் கூறி, தீத்திபாளையத்தைச் சேர்ந்த என். வருண்குமார், கோவை மாவட்ட கலெக்டர் மற்றும் மாவட்ட எஸ்.பி.,யிடம் புகார் மனு அளித்துள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் வருண்குமார் கூறியதாவது:

எனதுதனிப்பட்ட வங்கி மற்றும் யு.பி.ஐ., கணக்குகளை, கணேஷ்குமார் தனது வணிகப் பரிவர்த்தனைகளுக்குப் பயன்படுத்தியுள்ளார். சுமார் எட்டு மாதங்களில் ரூ.60 லட்சம் அளவுக்கு பரிவர்த்தனைகள் நடந்துள்ளன. இதற்கான வங்கி அறிக்கைகள், யு.பி.ஐ., பரிவர்த்தனை விவரங்கள், பணம் செலுத்தியதற்கான ஸ்கிரீன்ஷாட்கள் உள்ளிட்ட ஆதாரங்கள் என்னிடம் உள்ளன.

இதுகுறித்து கடந்த செப். 18ல் கோவை மாவட்ட எஸ்.பி., அலுவலகத்தில் புகார் அளித்தேன். அதற்கு டிஜிகாப் மனு எண் வழங்கப்பட்டது. அந்த மனு பேரூர் போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பப்பட்டும், புகாரின் முக்கிய அம்சங்கள் குறித்து உரிய விசாரணை நடத்தப்படவில்லை.

என்னிடம் ரூ.4 லட்சம் பெற வேண்டியுள்ளதாக கணேஷ்குமார் அளித்த புகார் உண்மைக்குப் புறம்பானது. அந்தத் தொகையை ஏற்கனவே திருப்பிச் செலுத்திவிட்டேன்.

பேரூர் போலீசார் எங்கள் இருவரையும் அழைத்த நிலையில், பின்னர் தொண்டாமுத்தூர் போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பினர். அங்கு இன்ஸ்பெக்டர், இது சிவில் விவகாரம் எனக் கூறி, இருதரப்பினரிடமும் எழுத்துப்பூர்வ விளக்கம் பெற்றார்.

எனது புகாருக்கான சி.எஸ்.ஆர்., நகலைக் கேட்டபோது வழங்கப்படவில்லை. சமரசம் செய்து கொண்டதாக எழுதிக் கொடுத்துவிட்டுச் செல்லுமாறு போலீசார் தெரிவித்தனர். ஆனால்,நான் எந்த சமரசமும் செய்து கொள்ளவில்லை.

எனது புகாருக்குப் பின்னர், எனக்கு எதிராக தொண்டாமுத்தூர் போலீஸ் ஸ்டேஷனில் சி.எஸ்.ஆர்., பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் பதிவு நேரம், ஸ்டேஷன் டைரி உள்ளிட்ட ஆவணங்களை உயர் போலீஸ் அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும்.

கடந்த செப். 24ல் கணேஷ்குமார் எனது பெயர் மற்றும் புகைப்படத்தைப் பயன்படுத்தி, சமூக வலைதளங்களில் அவதூறு பதிவுகளை வெளியிட்டார். இதனால் எனது சமூக மரியாதையும் தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளன.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கே. விக்னேஷ், கணேஷ்குமாரின் நெருங்கிய நண்பர் எனக் கூறி, எனக்கு கொலை மிரட்டல் விடுக்கப்படுகிறது. இதுகுறித்தும் உயர் போலீஸ் அதிகாரிகளிடம் புகார் அளித்துள்ளேன்.

எனது வங்கி மற்றும் யு.பி.ஐ., பரிவர்த்தனைகள் குறித்து முழுமையான விசாரணை நடத்த வேண்டும். சட்ட விதிமீறல்கள் இருப்பது தெரியவந்தால்,சம்பந்தப்பட்ட துறைகளுக்குத் தகவல் தெரிவித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். சமூக வலைதளப் பதிவுகள் குறித்தும் விசாரிக்க வேண்டும்.

எனது வங்கி அறிக்கைகள், பரிவர்த்தனை ஆதாரங்கள், அழைப்பு விவரங்கள் மற்றும் சமூக வலைதள ஆதாரங்களைப் பாதுகாப்பதுடன், எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு வருண்குமார் தெரிவித்தார்.



தாராபுரம் தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க வேட்பாளர் S.சுகன்யா அவர்களுக்கு நேற்று (4.10.2026) திருமங்கலம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் சேடப்பட்டி மணிமாறன் ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சகோதரர் ஜெ.திருவாசகம், ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் மற்றும் மூலனூர் பேரூர் கழக நிர்வாகிகளுடன்நாச்சியாபாளையம்,கன்னிவாடிபகுதிபொதுமக்களிடம்உதயசூரியன்சின்னத்திற்குவாக்குசேகரித்தனர்.

### சுதந்திரப் போராட்ட தியாகி, கொடிகாத்த குமரனின் 123வது பிறந்தநாளை முன்னிட்டு

# ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது



ஈரோடு சம்பத் நகரில் உள்ள கொடிகாத்த திருப்பூர் குமரனின் முழு உருவச் சிலைக்கு, ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ்கமிட்டிதலைவர் பா.ராஜேஷ் ராஜப்பா தலைமையில்,மண்டல தலைவர்களான மாமரத்துப்பாளையம் எஸ். கோபி, ஆர்.விஜய பாஸ்கர், சூரம்பட்டி சாம்ராட் அசோக்ஆகியோர்முன்னிலையில்,

முன்னாள் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினரும், தமிழ்நாடு சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினருமான ஆர். எம்.பழனிசாமி, திருப்பூர் குமரனின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில்முன்னாள் மாவட்டத் தலைவர் டி.திருச்செல்வம், பொதுச் செயலாளர்கள் டி.கண்ணப்பன், வி.கே. சச்சிதானந்தம், டெக்ஸ் அன்பழகன், முன்னாள் மாமன்ற உறுப்பினர் கை.சுப்பிரமணியம், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் ஊடகப்பிரிவு தலைவர் ம.முகமது அர்சத், மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மைத் துறை துணைத் தலைவர் கே. என்.பாஷா, தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் மாநிலபொதுச்செயலாளர் ஆரிப் அலி, மாநில ஒருங்கிணைப்பாளர்களான சங்கு நகர் சதாம் உசேன்,அக்னி தர்சன், ஈரோடு மாநகர் மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவர் சித்தோடு எஸ். பிரபு,ஈரோடு மேற்கு சட்டமன்ற இளைஞர் காங்கிரஸ் தலைவர் வசந்த் கலைப்பிரிவு மாவட்ட தலைவர் ஜாபர் அலி, மற்றும் மாவட்ட நிர்வாகிகள் சூரம்பட்டி திருவேங்கடம், சூரம்பட்டி விஜயகுமார், ராஜாஜிபுரம் குமரேசன், எம்.வி.விஜயராகவ், பெரியார்நகர் சூரஜ்,சிந்தன் நகர் கிருஷ்ணமூர்த்தி, டீக்கடை லோகு, ஸ்வீட் கனகராஜன்,சூரம்பட்டி சரவணன், சித்தோடு தினகரன், இளைஞர் காங்கிரஸ் கார்த்தி மற்றும் நேற்று புதிதாக காங்கிரஸில் இணைந்த மகாஜன கிரவுண்ட் கார்த்திகேயன் உள்ளிட்ட பலர் திரளாக கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியின் நிறைவில் அணைக்கட்டு பகுதி 48 வது வார்டு தலைவர் சசிகுமார் நன்றி கூறினார்.

### ஈரோடு மாவட்டத்தில் சுதந்திர போராட்ட தியாகி கொடிகாத்த குமரனின் 123வது பிறந்த நாள் விழாவில்

# அன்னாரது திருவுருவப் படத்திற்கு ஈரோடு கலெக்டர் ச.கந்தசாமி மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்



ஈரோடு மாவட்டம், சென்னிமலை பேரூராட்சியில், சுதந்திரப் போராட்டத் தியாகி கொடிகாத்த குமரன் அவர்களின் 123 ஆவது பிறந்தநாளைமுன்னிட்டு அன்னாரது இல்லத்தில் அவருடைய திருவுருவப் படத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் கந்தசாமி மற்றும் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் து.சண்முகன், காங்கேயம் சட்டமன்ற உறுப்பினர் என்.எஸ்.என்.நடராஜ் ஆகியோர் நேற்று (4.10.2026)மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்,மேலும்,அவர்களின் வாரிசுதாரர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்கள். தமிழ்நாடு அரசின் சார்பில் கொடிகாத்த குமரன் அவர்கள் பிறந்த இடமான சென்னிமலையில் ஆண்டுதோறும் அவரது பிறந்த நாளான அக்டோபர் மாதம் 4-ம் தேதி அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. கொடிகாத்த குமரன் அவர்கள் தனது 28-ம் அகவையில் பல்வேறு சுதந்திர போராட்டங்களில் கலந்து கொண்டு திருப்பூர் மாநகரில் நடைபெற்ற ஒரு சுதந்திர போராட்டத்தில் வெள்ளையர்களால் தாக்கப்பட்டதால் தான் ஏந்திய சுதந்திர கொடியினை கீழே விழாமல் தாங்கி பிடித்து தேசத்திற்காக இன்னுயிரை நீத்தார். அவருக்கு பெருமை சேர்க்கும் வகையில் கொடிகாத்த குமரன் அவர்களுக்கு ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில் விழா நடத்தப்பட்டு வருகிறது. மேலும், கொடிகாத்த குமரன் அவர்களின் பிறந்த இல்லம் அரசின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து, ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர், காங்கேயம் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் நேற்று (04.10.2026) கொடிகாத்த குமரன் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். மேலும், கொடிகாத்த குமரன் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு சால்வை அணிவித்து கௌரவித்தார்கள். இவ்விழாவில், சென்னிமலை பேரூராட்சி தலைவர் ஸ்ரீதேவி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சு.மகேஸ்வரன், பெருந்துறைவருவாய்வட்டாட்சியர் செல்வகுமார், சென்னிமலை பேரூராட்சி செயல் அலுவலர் க.மகேந்திரன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள்செ.கலைமாமணி (செய்தி), சு.செந்தில்குமார் (விளம்பரம்), கொடிகாத்த குமரன் வாரிசுதாரர் அண்ணாமலை உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஈரோடு நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அறிவாற்றல் கருத்தரங்கம்




நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் நூலகத்துறை சார்பாக முதலாமாண்டு மாணவர்களுக்கு "அறிவாற்றலை மேம்படுத்துதல் மற்றும் கல்வி நூலகங்களின் முக்கியத்துவம்" என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி.சண்முகன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவினை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதிசண்முகன் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார்.

கல்லூரியின் முதல்வர் முனைவர்சு.மனோகரன் மற்றும் நிர்வாக அலுவலர் முனைவர் வி.சி. சீனிவாசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். இவர்களுடன் துறைத்தலைவர்கள் மற்றும் உதவிப்பேராசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். முன்னதாககல்லூரியின் நூலகர் முனைவர் டி. மகாலிங்கம் அனைவரையும் வரவேற்றார்.

மேலும், இவ்விழாவில் வேளாளர் மகளிர் கல்லூரியின் நூலகம் மற்றும் தகவல் அறிவியல் துறைத்தலைவரும்,உதவிப் பேராசிரியருமான முனைவர்பி.மகாதேவன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார். அவர்தம் உரையில், கல்வி நூலகங்களின் முக்கியத்துவம், நூலக மின்னணுத தகவல்களை திறம்படப் பயன்படுத்தும் முறைகள், வாசிப்புப் பழக்கத்தின் அவசியம் மற்றும் வாழ்நாள் கற்றலில் நூலகங்களின் பங்கு குறித்து மாணவர்களுக்கு விளக்கினார்.

விழா முடிவில் நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் உள் தர உறுதிப்பாட்டு மையம் (IQAC) ஒருங்கினைப்பாளர் முனைவர் கே.அப்துல் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

கருத்தரங்கினை ஏற்பாடு செய்திருந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ்.நந்தகுமார் பிரதீப், எஸ் . திருமூர்த்தி ஆகியோர் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள்.

# ஈரோடு கோட்டை பெருமாள் கோவிலில் 18ம் ஆண்டு சீர் விழா: 450க்கும் மேற்பட்ட பெண்கள் சீர்வரிசை எடுத்து நகர்வலம்



ஈரோடு கோட்டை ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோவில் சார்பில், ஸ்ரீ கஸ்தூரி அரங்கநாதர் கமலவள்ளி தாயார் திருக்கோவிலுக்கு ஆண்டுதோறும் புரட்டாசி 3-வது சனிக்கிழமை சீர்வரிசை கொண்டு செல்லும் பாரம்பரிய சீர் விழா வெகுவிமரிசையாக நடைபெற்று வருகிறது. அந்த வகையில், 18-ம் ஆண்டு சீர் விழா நேற்று கோட்டை பத்திரகாளியம்மன் கோவில் வளாகத்தில் இருந்து தொடங்கியது. இதில் 450-க்கும் மேற்பட்ட பக்தர்கள், குறிப்பாகப் பெருந்திரளான பெண்கள் மங்களப் பொருட்களுடன் கூடிய சீர்வரிசை தட்டுகளைத் தலையிலும் கைகளிலும் ஏந்தியவாறு நகர்வலமாகப் புறப்பட்டனர். முக்கிய வீதிகள் வழியாக பக்திப் பரவசத்துடன் சென்ற இந்த சீர்வரிசை ஊர்வலம், இறுதியாக ஈரோடு கோட்டை ஸ்ரீ கஸ்தூரி அரங்கநாதர் பெருமாள் கோவிலை வந்தடைந்தது.

அங்குப் பெருமாள் மற்றும் தாயாருக்குச் சீர்வரிசைப் பொருட்கள் சமர்ப்பிக்கப்பட்டு, பெண் பக்தர்கள் உள்ளிட்ட அனைத்துப் பக்தர்களும் நெகிழ்ச்சியுடன் சுவாமி தரிசனம் செய்து வழிபாடு நடத்தினர். தொடர்ந்து வழிபாடுகள் அனைத்தும் சிறப்பாக நிறைவுற்றதும், பக்தர்கள் செங்குந்தர் மண்டபத்திற்குச் சென்றடைந்தனர். அங்கு விழாவில் பங்கேற்ற பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் என சுமார் 1000-க்கும் மேற்பட்டோருக்குச் சிறப்பு அன்னதானம் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை கோவில் கமிட்டியினர் சிறப்பாக செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மண்டபம் அருகே 120 கிலோ கடல் அட்டைகள் பறிமுதல்



ராமேசுவரம்: மண்டபம் அருகே வடக்கு பாக். நீரிணை கடற்பகுதியில் தடை செய்யப்பட்ட 120 கிலோ கடல் அட்டைகளை கடலோர காவல்படையினர் பறிமுதல் செய்தனர். மண்டபம் நிலைய கடலோரக் காவல்படையினர் ரோந்துபணியின்போது, மண்டபம் அருகே பாக். நீரிணை கடற்பகுதியில் சந்தேகத்திற்கிடமான வகையில் கரையில் நின்று கொண்டிருந்த பதிவு செய்யப்படாத நாட்டுப் படகிலிருந்து சோதனையிட்டனர்.

சோதனையில், 6 சாக்குப் பைகளில் சுமார் 1,120 கிலோ கடல் அட்டைகள் இருந்தன.

அவற்றை பறிமுதல் செய்த கடலோர காவல்படையினர், அதனை வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

மேலும், கடல் அட்டைகளை இலங்கைக்கு கடத்த முயன்ற கடத்தல்காரர்கள் குறித்து வனத்துறையும், மண்டபம் மெரைன் போலீஸாரும் விசாரித்து வருகின்றனர்.



ஈரோடு மாவட்டம் கவுந்தப்பாடியில் தியாகி கொடிகாத்த திருப்பூர் குமரன் அவர்களின் பிறந்தநாளையொட்டி, அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு செங்குந்தர் பேரவை அறக்கட்டளையின் கைலாசபதி, சதானந்தன், மணிசந்தோஷ் பரமசிவம், ரவி, குணாளன், அருள்ஜோதி, சிவப்பிரகாசம், மாதேஸ்வரன், ஈரோடு பாலமுருகன் டெக்ஸ் அரிமா அன்பழகன் மற்றும் கார்த்தி ஆகியோர் கலந்து கொண்டு, கொடிகாத்த திருப்பூர் குமரனின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி வீரவணக்கம் செலுத்தி மரியாதை செய்தனர். இந்த நிகழ்வில் ஏராளமான நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் இருந்தனர்.

### வீட்டில் இருந்தபடியே இனி பள்ளியில் நடைபெறுவதை கவனிக்கலாம்

## குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், கோவை கவுண்டம்பாளையம் அடுத்த பிஎன்டி காலனி பகுதியில், டி.என். ஹேப்பி கிட்ஸ்.இன் எனும் டேகேர் மற்றும் டியூசன் சென்டர் திறக்கப்பட்டுள்ளது



பெண் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி படுத்த வேண்டும் என்ற நோக்கில் இந்தியாவில் முதல்முறையாக துவங்கபட்டது டிஎன்.ஹேப்பி கிட்ஸ் டாட் இன் எனும் டே கேர் மற்றும் டியூசன் சென்ட்டர். இங்கு உள்ள சிசிடிவி கேமராக்களை குழந்தைகளின் பெற்றோர்கள் பார்த்துகொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் 13 கிளைகளுடன் இயங்கும் இந்த பள்ளியின் 14 வது கிளை கோவை கவுண்டம் பாளையம் அடுத்த பிஎன்டி காலனி பகுதியில் திறக்க பட்டுள்ளது.

இது குறித்து இந்த கிளையின் உரிமையாளர் அருண் சத்யா செய்தியாளர்களிடம் கூறியதாவது..

பெண் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி படுத்தும் வகையில் உருவாக்க பட்டதுதான் இந்த பள்ளி. இங்கு சேர்க்கபடும் குழந்தைகளின் பெற்றோர்களுக்கு இங்குள்ள சிசிடிவி கேமரா அக்ஸஸ்களை வழங்கி விடுகின்றோம். இதன் மூலமாக உங்களது குழந்தை எவ்வாறு பாடம் படிக்கிறது, பள்ளியில் குழந்தைகளின் செயல்பாடுகள் என்னென்ன என வீட்டில் இருந்தே பெற்றோர்கள் கண்காணித்து கொள்ளலாம் என்ற திட்டத்தை முதல்முறையாக தமிழகத்தில், கடந்த மூன்று ஆண்டுகளுக்குமுன்னர்கொண்டு வந்தோம். இந்த மூன்று ஆண்டுகளில் தமிழகத்தில் 13 கிளைகளை துவங்கி விட்டோம் இது எங்களது 14வது கிளை என்று தெரிவித்தார். மேலும் உலக தரம் வாய்ந்த, ஐஐடி சிலபஸ்களை இங்குவரும் குழந்தைகளுக்கு கற்று தருவதாகவும், 5 வயது குழந்தைகளுக்கு என்னென்ன கற்றுதரவேண்டுமோ அவற்றை எல்லாம் இங்கு கற்று தருவதாக கூறினார். தற்போது மாறி வரும் உலகில் ஏஐ ரோபோவை கொண்டு கற்றல் பயிற்சிகளை வழங்கி வருவதாக கூறிய அவர், குறைந்த விலையில் தரமான கல்வியை வழங்குவதே எங்களது நோக்கம் என்றும் தெரிவித்தார். மேலும் சமூதாயந்தில் மிகவும் பின் தங்கிய குழந்தைகளுக்கு இலவச கல்வியும் இங்கு வழங்க பட்டு வருகிறது. மேலும் ஒற்றை பெற்றோர்கள், பெற்றோர்களை இழந்தவர்களுக்கும் இந்த திட்டத்தை செயல்படுத்தி வருகின்றோம் மேலும் ரேபிட்டோ, ஸ்விகி, ஜோமோட்டோ உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளும் பெற்றோர்களின் குழந்தைகளுக்கு 50 சதவிகித தள்ளுபடியும் வழங்கி வருகின்றதாக தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலில் திமுக வேட்பாளர் ஐ.பரந்தாமன் இறுதி கட்டப் பிரச்சாரம்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் பிரச்சாரத்தின் கடைசி நாளான திமுக வேட்பாளர் ஐ பரந்தாமன் மற்றும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் சுந்தர் ஆகியோர் வீதி வீதியாக நடந்து சென்று துண்டு பிரசுரம் வழங்கி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.

மதுராந்தகம் நகர் பகுதியில் உள்ள 15 வார்டுகளில் உள்ள பொது மக்களை வீடு வீடாக சென்று முந்தைய திமுக அரசின் சாதனைகளை விளக்கியும் தற்போதைய தவெக அரசின் அவலங்களை எடுத்து கூறியும் துண்டு பிரசுரங்களை வழங்கி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம், மதுராந்தகம் நகர செயலாளர் குமார், நகர மன்ற தலைவர் மலர்விழி குமார், பொதுக்குழு உறுப்பினர் எம்.எஸ். சுகுமார் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### மங்களூரில் WE THE LEADERS அமைப்புடன் சேர்ந்து

## ஆதரவற்ற குழந்தைகளுக்கு அன்னதானம் மற்றும் கல்விச்சீர் வழங்கிய தன்னார்வலர்கள்



கடலூர் மாவட்டம் மங்களூரில் இயங்கி வரும் ஆதரவற்ற சிறுவர்கள் இல்லத்தில் சுமார் 50க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் தங்கிக் கல்வி பயின்று வருகின்றனர் நேற்றைய தினம் WE THE LEADERS அமைப்பின் சார்பாக மாணவ மாணவியர்களுக்கு இட்லி பூரி பொங்கல் உப்புமா உள்ளிட்ட காலைசிற்றுண்டிவழங்கப்பட்டது வீ த லீடர் அமைப்பின் சிறுப்பாக்கம் ஒருங்கிணைப்பாளர்ராஜாகிஷோர்தலைமையில் இந்த சிறப்பு அன்னதானம் வழங்கப்பட்டது பின்னர் ஆதரவற்ற மாணவ மாணவியர்களுக்கு நோட்டு புத்தகம் பென்சில் பேனா உள்ளிட்ட பல்வேறு கல்விச்சீர் வழங்கப்பட்டது

இந்நிகழ்வில் ஜனா, தமிழன்பன் உள்ளிட்ட தன்னார்வலர்கள் சேர்ந்து வீதலீடர் அமைப்பினருடன் ஒன்றிணைந்து செயல்பட்டனர் இந்த உதவிகள் மாதம் ஒருமுறை சிறுப்பாக்கத்தை சுற்றியுள்ள பல்வேறு ஆதரவற்ற சிறுவர்கள் மற்றும் முதியோர் இல்லத்திற்கு தன்னார்வலர்கள் அமைப்பினர் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது

### கோவை குலாலர் சங்கத்தின் 53ஆம் ஆண்டு விழா நிறைவு

# மாணவர்களுக்கு கல்விப் பரிசு, மண்பாண்ட கலைஞர்களுக்கு மின்திருவி வழங்கும் விழா கோவை துடியலூர் பகுதியில் நடைபெற்றது



கோவை மாவட்ட குலாலர் சங்கத்தின் 53-ஆம் ஆண்டு விழா, கல்விப் பரிசளிப்பு விழா மற்றும் சங்க பயன்பாட்டிற்கான புதிய கணினி வழங்கும் முப்பெரும் விழா, இன்று துடியலூரில் உள்ள தனியார்,திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

கோவை மாவட்ட குலாலர் சங்கத் தலைவர் வழக்கறிஞர் பி. செந்தில்குமார் தலைமையில் நடைபெற்ற விழாவில், மாவட்ட செயலாளர் ஜி.சி. பழனிச்சாமி வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட பொருளாளர் கே. நடராஜ் ஆண்டறிக்கை சமர்ப்பித்தார்.

விழாவில் பேராசிரியை டாக்டர் ஆர். பரிமளா, சினேகராம் மருத்துவமனை நிறுவனர் டாக்டர் ஜி.விஸ்வநாதன், திரைப்பட நடிகரும் இயக்குநருமான பேராசிரியர் அருள்நிதி மு. துரைசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டு கல்விப் பரிசு பெற்ற மாணவர்களை வாழ்த்தினர். மேலும், மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள், மகளிரணி நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்று விழாவை சிறப்பித்தனர். மண்பாண்டத்தொழில்செய்து வரும் இரு கலைஞர்களுக்கு மின்சார த்தில் இயங்கும் மண்திருவி வழங்கப்பட்டது. விழாவில், குலாலர் சமூகத்தினருக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் சிறப்பு இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்றும், மிகவும் பிற்படுத்த ப்பட்டோர் இடஒதுக்கீட்டில் 5 சதவீத உள் ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்றும் கோ ரிக்கை விடுக்கப்பட்டது.

தமிழக அரசின் பல்வேறு ஆணையங்கள் மற்றும் வாரியங்களில் தகுதியான குலாலர் சமூகத்தினருக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்றும் முதல்வர் ஜோசப் விஜய் அவர்களிடம் கோரிக்கைவைக்கப்பட்டது.மேலும்,மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு வட்டியில்லா கடன், ஏற்றுமதி சலுகை, தொழில் நடைபெறும் இடங்களுக்கு பட்டா வழங்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பயிற்சி வழங்குதல் மற்றும் சங்கத்தின் செயல்பாடுகளை கணினி மயமாக்குதல் உள்ளிட்ட திட்டங்களும் அறிவிக்கப்பட்டன. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜி. பன்னீர்செல்வம் பி.இ. நன்றி உரையாற்ற, 53-ஆம் ஆண்டு முப்பெரும் விழா சிறப்பாக நிறைவடைந்தது.

### கோவை மேட்டுப்பாளையம் சாலை துடியலூரில்

# இதயத்திற்காக இதயத்தில் இருந்து என அவேரா இதய மருத்துவமனை, கோவையில் முதல் முறையாக துவங்கபட்டது

## இதனை பண்ணாரி அம்மன் குழும தலைவர் எஸ். வி. பாலசுப்பிரமணியம் ரிப்பன் வெட்டி தீறந்து வைத்தார்



கோவை மாநகரில் இதய நோய்களுக்கான பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட அவேரா இதய மருத்துவமனை, இன்று திறக்கப்பட்டது. இதனை பண்ணாரி அம்மன் குழுமத்தின் தலைவர் எஸ் பி பாலசுப்ரமணியம் தலைமை விருந்தினராகவும், மருத்துவம், தொழில், கல்வி மற்றும் சமூகத் துறைகளைச் சேர்ந்த சிறப்பு விருந்தினர்கள் முன்னிலையில் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் டாக்டர் ஆர்.வி. பத்மஸ்ரீ விருது பெற்ற சங்கரா கண் அறக்கட்டளையின் நிறுவனர் ரமணி, பிரிகோல் லிமிடெட் நிறுவனர் விஜய் மோகன், ஸ்ரீ கிருஷ்ணா கல்வி குழுமத்தின் நிர்வாக அறங்காவலர் மலர்விழி, பின்னணி பாடகி சுஜாதா மோகன், மேயோ கிளினிக் கௌரவ பேராசிரியர் டாக்டர் சந்திரசேகரன், கோயமுத்தூர் குஜராத்தி சமாஜ் தலைவர் பிரபுல் சேஜ்பால், மற்றும் ராஜஸ்தானி சங்கத்தின் தலைவர் சந்தோஷ் மந்த்ரா ஆகியோர் கலந்து கொண்டு கொண்டனர். இதனை தொடர்ந்து மருத்துவமனையின் சிறப்பம்சங்கள் குறித்து கேட்டறிந்தனர். அப்பொழுது இந்த மருத்துவமனை யானது, இதய நோய்களுக்கான முழுமையான சிகிச்சை அளிக்கப்பட உள்ளதாக அவேரா மருத்துவமனையின் தலைமை மருத்துவர் ராஜ்பால் அபைச்ந்த், மற்றும் டாக்டர் சந்திரசேகர், ஆகியோர் தெரிவித்தனர். மேலும் இதயத்திற்காக இதயத்தில் இருந்து என்ற அடிப்படையாகக் கொண்டு இந்த இதயநோய் மருத்துவமனை திறக்கப்பட்டுள்ளது. இங்கு, நிபுணத்துவம் வாய்ந்த, மேம்பட்ட தொழில்நுட்பம், மற்றும் ஒருங்கிணைந்தசிகிச்சை ஆகியவற்றை ஒரே கூரையின் கீழ், கொண்டு வரும் நோக்கத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு மருத்துவமனையின் தனித்துவம், நேர்மை, நம்பிக்கை, மருத்துவ சிறப்பு துல்லிய தொழில்நுட்பம், மற்றும் கருணையான கவனிப்பு ஆகியவற்றை வலியுறுத்துகிறதாக தெரிவித்தார். இம்மருத்துவமனையில் நூறு படுக்கை யறைகள் கொண்டதாகவும், இதயம் மற்றும் தீவிர சிகிச்சை பிரிவுகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும்தெரிவித்தனர்.இதன் உள்கட்டமைப்பில் இரண்டு பிலிப்ஸ் அஸூரியன் செவன் சீரிஸ் கேத் லேப்கள், இரண்டு உலகத்திலும் வாய்ந்த கெட்டிங்கே மாடுலர் அறுவை சிகிச்சை அரங்குகள், 18 படுக்கைகள் கொண்ட இதய பராமரிப்பு பிரிவு,16 படுக்கைகள் கொண்ட இதய மார்பக அறுவை சிகிச்சைக்கு பிந்தைய பிரிவு, மற்றும் செயற்கை நுண்ணறிவு ஒருங்கிணைந்த படமெடுக்கும் தொழில்நுட்பத்துடன் கூடிய, பிலிப்ஸ் இன்சிசிவ் கார்டியாக் சிடி ஆகியவை அடங்கும் என்று தெரிவித்தனர். வார 7 நாட்களும்,24 மணி நேரமும் மருத்துவ சேவைகள், ஆம்புலன்ஸ் சேவைகள், மற்றும் மேம்பட்ட இதய மார்பக அறுவை சிகிச்சைகள் கிடைக்கும் என்றும் தெரிவித்தனர்.



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தெற்கு ஒன்றிய உட்பட்ட சிலாவட்டம் பகுதியில் அதிமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் கணிதா சம்பத் அவர்கள் சிலாவட்டம் பகுதியில் திறந்த வாகனத்தில் சென்று தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டிருந்தார் அப்போது திடீரென்று பலத்த மழை பெய்தது அந்த மழையும் பொருட்படுத்தாமல் பொதுமக்கள் இடையே அம்மா ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டங்களை அனைத்தையும் எடுத்துக் கூறி இரட்டை இலை சின்னத்துக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டார் இதில் பொதுமக்கள் மழையும் பொருட்படுத்தாமல் காத்திருந்து அவருக்கு மாலை அணிவித்து ஆரத்தி எடுத்து சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

# இந்திய இளைஞர்கள் மற்றும் இந்திய வளர்ச்சி குறித்து லண்டன் நாடாளுமன்றத்தில் சிறப்புரையாற்றி கௌரவ பட்டம் பெற்று, கோவை திரும்பிய டாக்டர் மணிகண்டனுக்கு கோவை விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது




லண்டன் யு.கே நாடாளுமன்றத்தில் இளைஞர் தலைமைத்துவம், சர்வதேச அரசியல் மற்றும் உலகளாவிய விவகாரங்களில் இளைஞர்களின் பங்களிப்பு குறித்து உரையாற்றுவதற்காக கோவையைச் சேர்ந்த டாக்டர் டி.மணிகண்டன் லண்டன் சென்றிருந்தார். யு.கே நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவருக்கு, அவரது பேச்சு மற்றும் பங்களிப்பை பாராட்டும் வகையில் இன்டர்நேஷனல் யூத் டிப்ளமேக்கிஸ்பீக்கர் என்ற கௌரவப் பட்டம் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து உத்தரப் பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், ஆந்திரப் பிரதேச அமைச்சர் நாரா லோகேஷ், தெலங்கானா துணை முதலமைச்சர் மல்லுபாட்டிவிக்ரமார்கா ஆகியோரை சந்தித்து டாக்டர் டி. மணிகண்டன் வாழ்த்துகளை பெற்றார். பின்னர் டெல்லியில் இருந்து விமானம் மூலம் கோவை வந்தடைந்த அவர், கோவை விமான நிலையத்தில்செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது பேசிய டாக்டர் டி. மணிகண்டன், கூறியதாவது.. "இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் பேசியது பெருமையாக உள்ளது. இதனை அங்கீகரிக்கும் வகையில் பல்வேறு மாநில முதலமைச்சர்கள் என்னை அழைத்து பாராட்டியுள்ளனர். பாரத பிரதமரின் இலக்கை நோக்கி இளைஞர்கள் பயணிப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. இதுபோன்ற நிகழ்வுகள் இளைஞர்களுக்கு ஊக்கத்தை அளிக்கும்" என்றார்.

மேலும், "மற்ற மாநில முதலமைச்சர்கள் என்னை அழைத்து பாராட்டியுள்ளனர்.தமிழக முதலமைச்சரும் என்னை அழைத்து பேசி பாராட்டவேண்டும்என்பதே எனது விருப்பம்" என அவர் தெரிவித்ததுடன், தமிழக அரசின் அழைப்புக்காக காத்திருப்பதாகவும் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற (தனி) தொகுதியில் வருகின்ற 6 ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது இதனை அடுத்து பல்வேறு கட்சியினர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர் நேற்று மதச்சார்பற்ற சமூக நீதி வெற்றி கூட்டணி சார்பில் தமிழக வெற்றி கழகம் சார்பில் போட்டியிடும் மரகதம் குமரவேல் அவர்கள் மதுராந்தகம் நகராட்சி உட்பட்ட பகுதியில் ஆயிரக்கணக்கான கட்சி நிர்வாகிகளுடன் அனல் பறக்கும் இறுதி கட்ட தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார் இதில் காங்கிரஸ்.வி.சி.க ம.தி.மு.க. இ.யூ.மு.லிக் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

## திருமங்கலம் அருகே கார், ஆம்புலன்ஸ் நேருக்கு நேர் மோதி கோர விபத்து:

# கல்லூரி மாணவர், நண்பர்கள் இருவர் உட்பட 3 பேர் பரிதாப பலி

தூத்துக்குடியைச் சேர்ந்த சுப்பிரமணி இளைய மகன் ஆதித்யாவை (19) ஈரோட்டில் உள்ள தனியார் கல்லூரியில் பயின்று வருகிறார்.மூன்று நாள் விடுமுறைக்காக சொந்த ஊருக்கு வந்த ஆதித்யா விடுமுறை முடிந்து கல்லூரிக்கு காரில் சென்று கொண்டிருந்தனர். காரில் ஆதித்யா, அவரது தாய் சொர்ணலட்சுமி மற்றும் மூத்த சகோதரர் மூர்த்தி (21) ஆகியோர் பயணித்தனர். காரை ஆதித்யாவின் சகோதரர் மூர்த்தி ஓட்டி வந்தார் கார் மதுரை கப்பலூர் சுற்றுச்சாலையில் சொக்கநாதன்பட்டி அருகேவந்து கொண்டிருந்தது அதே வேளையில் எதிர் திசையில் திருமங்கலம் சோழவந்தான் ரோட்டைச் சேர்ந்த சரவண கணேஷ் (து/பெ கார்த்திகேயன்) என்பவர் எலும்பு முறிவு (ortho) சிகிச்சைக்காக திருமங்கலம் தனியார் மருத்துவமனையிலிருந்து மதுரை தனியார் மருத்துவமனைக்குதனியார் ஆம்புலன்சில் அழைத்துச் செல்லப்பட்டார் கணேஷ் உடன் அவரது நண்பரான பிரதீப் (து/பெ கௌதம்) உடனிருந்துள்ளார். இந்த நிலையில் சொக்கநாதன் பட்டி அருகே அதிவேகமாக



வந்த ஆம்புலன்ஸ் ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து சாலையின் தடுப்புச்சுவரைத்தாண்டி எதிரே தூத்துக்குடி குடும்பத்தினர் வந்த காரின் மீது பலமாக மோதி விபத்துக்கு ள்ளானது.

இந்த கோர விபத்தில், காரில் பயணித்த கல்லூரி மாணவர் ஆதித்யா (19) சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். மேலும், ஆம்புலன்ஸில் வந்த நோயாளி சரவண கணேஷ் மற்றும் அவரது நண்பர் பிரதீப் ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

காரில் இருந்த ஆதித்யாவின் தாய் சொர்ணலட்சுமி மற்றும் மூத்த சகோதரர் மூர்த்தி ஆகியோர் பலத்த காயமடைந்தனர். ஆம்புலன்ஸ் ஓட்டுநர்ஆனந்த்லேசான காயங்களுடன் உயிர் தப்பினார்.

காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.விபத்து குறித்துசம்பவ இடத்திற்கு வந்த மாவட்ட எஸ்பி தேவநாதன் திருமங்கலம்டிஎஸ்பி இமயவர்மன் தலைமையிலான காவல்துறையினர் விபத்து குறித்து விசாரணை மேற்கொண்டனர் . தொடர்ந்து பிறந்த மூன்று பேரும் உடல்களை கைப்பற்றி திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு பிரயோத பரிசோதனைக்காக அனுப்பிவைத்தனர்.சம்பவத்தால் கப்பலூர் மதுரை சுற்றுச்சாலையில் ஒரு மணிநேரத்திற்குமேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது தொடர்ந்து சாலையில் விபத்துக்குள்ளான வாகனத்தை அகற்றி போக்குவரத்தை போலீசார் சரி செய்தனர்.விடுமுறை முடிந்து கல்லூரிக்கு சென்ற மாணவனும் சிகிச்சைக்காக ஆம்புலன்சில் மதுரை மதுரை சென்ற நண்பர்கள் இருவர் உட்பட கோர விபத்தில் மூவரும் பலியான சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# வங்கிக் கணக்குகளில் KYC விவரங்களைப் புதுப்பிக்கும்போது வாடிக்கையாளர்கள் மிகுந்த விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்

:வங்கிக் கணக்குகளில் KYC விவரங்களைப் புதுப்பிக்கும் போது வாடிக்கையாளர்கள் மிகுந்த விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என வலியுறுத்தும் வகையில், காரைக்குடியைச்சேர்ந்த வாடிக்கையாளர் ஒருவர் தனக்கு நேர்ந்த அனுபவத்தைப்பகிர்ந்துள்ளார்.

வேறு ஒருவரின் பெயரில் வந்த மின்னஞ்சல் சமீபத்தில்,தான் கணக்கு வைத்துள்ள பொதுத்துறை வங்கியிலிருந்து தனக்கு ஒரு மின்னஞ்சல் வந்ததாகவும், அதில் வேறு ஒருவரின் பெயருடன் KYC தொடர்பான PDF கோப்பு இணைக்கப்பட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வேறு ஒருவரின் பெயர் இருந்ததால், அந்த PDF-ஐத் திறக்காமல் விட்டதாகவும், அதற்கான கடவுச்சொல் தன்னிடம் இல்லாததால் அதைத் திறக்க முயற்சி செய்யவில்லை என்றும் கூறுகிறார்.

OTP கேட்டதாகக் கூறப்படும் தொலைபேசி அழைப்பு

மறுநாள், அதே வங்கியிலிருந்து ஒருவர் தொலைபேசியில் தொடர்புகொண்டு,"உங்களுடைய கணக்கை நாங்களே KYC செய்து வருகிறோம். OTP-ஐத் தெரிவியுங்கள்" என்று கேட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, வங்கியின் மேலாளரைத் தொடர்புகொண்டு விசாரித்ததாகவும், அந்த நபர் வங்கியின் அலுவலர்தான் என்றும், OTP-ஐ வழங்கலாம் என்றும்மேலாளர்தெரிவித்ததாகவும் அவர் கூறுகிறார்.




அதன் அடிப்படையில் OTP-ஐ வழங்கியதாகவும், அதே நேரத்தில் வேறு ஒருவரின் பெயரில் தனக்கு வங்கியிலிருந்து மின்னஞ்சல் வந்திருப்பது குறித்த தகவலையும் மேலாளரிடம் தெரிவித்ததாகவும் கூறுகிறார். இதுகுறித்து பார்த்து நடவடிக்கை எடுப்பதாக மேலாளர் தெரிவித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மீண்டும் வேறு பெயரில் KYC ஆவணம்அன்றைய மாலை, மீண்டும் வேறு ஒருவரின் பெயரில் KYC செய்யப்பட்டதாகக் கூறப்படும் PDF ஆவணம் தனக்கு வந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து மறுநாள் மீண்டும் வங்கி மேலாளரைத் தொடர்புகொண்டபோது, பல்வேறு இடங்களில் KYC பணிகள் நடைபெறுவதால்,யாரிடமிருந்து இந்தத் தகவல் மாறியுள்ளது என்பது தெரியவில்லை என பொதுவான பதில் அளிக்கப்பட்டதாக அவர் கூறுகிறார். ஆனால், வங்கியின் அதிகாரப்பூர்வ மின்னஞ்சல் முகவரியிலிருந்தே அந்த ஆவணம் தனக்கு வந்துள்ளதால், வங்கியின் தரப்பில்தான் ஏதேனும் தவறு ஏற்பட்டிருக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டியதாகவும் தெரிவித்துள்ளார்.

வாடிக்கையாளர் சேவை மையத்தில் அதிர்ச்சிதகவல் இதையடுத்து வங்கியின் வாடிக்கையாளர் சேவை மையத்தைத் தொடர்புகொண்டு அனைத்து விவரங்களையும் தெரிவித்ததாகவும் அவர் கூறுகிறார்.

அப்போது, தனக்கு மின்னஞ்சலில் வந்தKYC எண்ணுடன் உள்ள PDF தன்னுடையதுதான் என்றும், அந்த ஆவணத்தை தனது வழக்கமான கடவுச்சொல்லைப் பயன்படுத்தி திறந்து பார்க்கலாம் என்றும் வாடிக்கையாளர் சேவை மையத்தினர்தெரிவித்ததாகக் கூறுகிறார்.

அதன்படி PDF-ஐத் திறந்து பார்த்தபோது, அதில் தனது புகைப்படம், பிறந்ததேதி,முகவரி மற்றும் மின்னஞ்சல் உள்ளிட்ட விவரங்கள் அனைத்தும் சரியாக இருந்ததாகவும், பெயர் மட்டும் வேறு ஒருவருடைய பெயராக மாற்றப்பட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும், மொபைல் எண் குறிப்பிடப்பட்டிருந்த இடத்தில் "Not Provided" என்றதகவல் இடம்பெற்றிருந்ததாகவும் கூறுகிறார்.

இதனால் அதிர்ச்சியடைந்த அவர், உடனடியாக அந்த ஆவணங்களுடன் வங்கிக்குச் சென்றதாக தெரிவித்துள்ளார்.வங்கி அதிகாரிகள் அளித்த விளக்கம் அப்போது வங்கி மேலாளர் இல்லாததால், உதவி மேலாளரைச் சந்தித்ததாகவும் அவர் கூறுகிறார்.

அவரிடம் விசாரித்தபோது, சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அனைத்து வங்கிகளிலும் அவசரமாக KYC-ஐ உறுதி செய்யும் பணிகள் நடைபெற்றதாகவும், அந்தச் சமயத்தில் வங்கி அலுவலர்கள் தவறுதலாக உங்களது பெயரை மாற்றி KYC செய்துவிட்டதாகவும் வாய் வழி தகவலாக உதவி மேலாளர் தெரிவித்ததாகக் கூறுகிறார். மேலும், அந்தத் தவறை வங்கியின் மேலிடத்துக்குத் தெரிவித்து, தவறாக பதிவான KYC-ஐ நீக்கிவிட்டு,ஏற்கனவே வங்கியில் இருந்த தனது சரியான KYC விவரங்களின் அடிப்படையில் புதிய KYC-ஐதயாரித்து தருவதாகவும் தெரிவித்ததாக அவர் கூறுகிறார்.

அதனைத் தொடர்ந்து சுமார் ஒரு மணி நேரத்திற்குள், தனது சரியான விவரங்களுடன் புதிய KYC பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல் கிடைத்ததாக தெரிவித்துள்ளார்.

வாடிக்கையாளர்களுக்கு முக்கியமான விழிப்புணர்வு

இந்த அனுபவத்தின் அடிப்படையில், வங்கி வாடிக்கையாளர்கள் தங்களுடைய KYC விவரங்கள் சரியாக உள்ளதா என்பதை அவ்வப்போது நேரில்சென்று சரிபார்த்துக் கொள்ள வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

- ஜெயம், காரைக்குடி



தாராபுரம் இடைத்தேர்தல் வழக்கறிஞர் சுகன்யாவுக்கு தென்காசி தெற்கு மாவட்ட திமுகவினர் தீவிர பிரச்சாரம் தென்காசி அக்டோபர் 4தமிழகத்தில் நாளை மறுநாள்ஆறாம் தேதி நடைபெறும் தாராபுரம் சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் திமுக வேட்பாளர் வழக்கறிஞர் சுகன்யா அவர்களின் வெற்றிக்காக தென்காசி தெற்கு மாவட்ட திமுக தென்காசி மற்றும் கடையநல்லூர் நகர நிர்வாகிகள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர் தென்காசி தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் வே ஜெயபாலன் அவர்களின்தலைமையில் திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் பணிகளின் போது தாராபுரம் சட்டமன்ற தொகுதி அலுவலகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சிறுபான்மை அணி மாநில அமைப்பு செயலாளர் சுபேர் கான்அவர்களுடன்தாராபுரம்இடைத்தேர்தல்சகோதரிவழக்கறிஞர்சுகன்யாவுக்காகஉதய சூரியன்சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்திட வெள்ளிக்கிழமை தொழுகைக்குப் பின்பு வாக்கு சேகரித்தார்கள் நிகழ்வில் கடையநல்லூர் கழக நகர செயலாளர் அப்பாஸ் நெல்லை மத்திய மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினரும் அப்துல் வஹாப் தென்காசி நகர மன்ற தலைவர் நகரச் செயலாளர் சாதிர் துணை செயலாளர் மஸ்தான் அலி 16வார்டு செயலாளர் மாப்பிள்ளை அலி மக்கா நகர்BLA2 நிர்வாகி ராஜா முஹம்மது விவசாய அணி அப்துல் மஜீத் 24 வது வார்டு பிரதிநிதி ஐயுப் கான் மற்றும் கழக நிர்வாகிகள்தாராபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்ட பள்ளிவாசல்களில் தொழுகைக்கு முன்பு முஸ்லிம் பெருமக்களிடம் வாக்குகள் சேகரித்தனர் தமிழ்நாடு கட்சி இல்லம் உலமாக்கள் சபை உலமாக்களுக்கு ஓய்வூதியம் என முஸ்லிம் சிறுபான்மையினருக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடைபெற்ற வளர்ச்சிப் பணிகள் மற்றும் திமுக அரசு செய்த உதவிகளை கூறி வாக்குகள் சேகரித்தனர்

# LeT commander 'Hashim Moosa' used Ayurvedic honey remedy to heal bullet wounds in jungle

*A top Pakistani terrorist, believed to be a former commando of the Pakistan Army's elite Special Services Group (SSG), had turned to age-old Ayurvedic treatment of using pure honey to treat his bullet wounds for early healing while hiding deep in the forests of Jammu and Kashmir, officials said on Sunday.*



*Mohd Asif, alias "Hashim Moosa", the chief operational commander of the banned Lashkar-e-Taiba (LeT) in the region and one of the masterminds of the 2025 Pahalgam terror attack, was killed in a high-altitude operation by the Army in Yousmarg in Budgam district of central Kashmir earlier this week. According to the officials, Moosa sustained bullet injuries during an earlier encounter in the Dorimal-Gambhir Moghla area during 'Operation Sheruwali' in Rajouri area of the Jammu region. The operation continued for more than 45 days to hunt for the two trapped terrorists, who, it later emerged, were Moosa and his associate Yasir. While holed up inside the jungles of Poonch and Rajouri, the terrorist applied honey to his wounds, tapping into its Ayurvedic healing properties to accelerate tissue recovery and prevent infection in the wild because he could not access medical treatment due to the security cordon around the area, the officials said. After the death of Yasir in the higher reaches of Yousmarg in the first week of September, a phone was recovered from him in which pictures were found of the honey-treated injuries of Moosa. They were transmitted across the border to their handlers in Pakistan to apprise them of the top terrorist's health condition, the officials said. The handlers were issuing instructions to ensure that the honey was pure as this would help in the quick healing of Moosa, who was allegedly involved in a dozen terror attacks including the 2025 Pahalgam massacre in which 26 people, mainly tourists, were killed in the meadows of Baisaran. Medical experts said that the terrorist's jungle survival tactic relied directly on long-established Ayurvedic principles of wound management.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.